உ

திருச்சிற்றம்பலம்



ஈழத்துப் புலவர் பரம்பரை

நவாலியூர்

கவிசிந்தாமணி

புலவர்மணி

## சோ. இளமுருகனார்

எய்திய

# "சிவபதம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

திருச்சிற்றம்பலம்



ஈழத்துப் புலவர் பரம்பரை

நவாலியூர்

கவிசிந்தாமணி

புலவர்மணி

# சோ. இளமுருகனார்

எய்திய

# “ சிவபதம் ”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9292
சிவய

சிவபதமடைந்த நாள்

ஆண்டு இராட்சதத்தில் ஆனமார் கழித்திங்கள்
பூண்ட முதல்நாளிற் பொன்னுடு — ஈண்டி
எதிர்கொள்ளச் சென்றன் இளமுருக வேந்தல்
புதிய புகழுடம்பு பூண்டு.

EVELYN RUTNAM LIBRARY JAFFNA
321

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புலவர்மணி சோ. இளமுருகனார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

திருச்சிற்றம்பலம்

நானூறு ஆண்டுகளுக்கு முன்னே நவாலியூரிற் குடியேறித் திருத்தக வாழ்ந்த பெருங்குடித்தோன்றல் வன்னியசேகரமுதலி வழிவந்த சோமசுந்தரப் புலவருக்கு, சின்னம்மையாரின் மணிவயிற்றில் அருந்தவப் புதல்வராய் இளமுருகனார் அவர்கள் கீலக வருடம், வைகாசித் திங்கள் முப்பதாம் திகதி வியாழக்கிழமை (11-6-1908) பிறந்தார். ஐந்தாம் வயதில் திரு. ஆராமலிங்க உபாத்தியாயர் அவர்களால் ஏடு தொடக்கப் பெற்ற அவர் நவாலியிலுள்ள பாடசாலையில் கல்வி கற்கத்தொடங்கிப் பின்பு வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் எட்டாம் வகுப்புவரை தமிழும் ஆங்கிலமும் முறையே பயின்றதுடன், இலக்கிய இலக்கணங்களையும் சோதிடத்தையும் தமது தந்தையாரிடம் கற்று இவற்றில் சிறந்த பாண்டித்தியம் பெற்றார்.

தமது இளம் வயதிலே ஆசிரியத் தொழிலை மேற்கொண்டு நவாலி அரசடி அரசினர் பாடசாலையிலும், ஆனைக்கோட்டை அரசினர் பாடசாலையிலும், கட்டுடை சைவ வித்தியாசாலையிலும், அளவெட்டி அருணோதயாக் கல்லூரியிலும், தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும் கல்வி கற்பித்தார். பின்பு மேறபடிப்பு விரும்பி, கோப்பாய் அரசினர் பாடசாலையில் ஆசிரியப் பயிற்சி பெற்றுப் பின்னர் ஏறத்தாழப் பதினைந்து ஆண்டுகள் வரையும் கொழும்புத்துறை கத்தோலிக்க ஆசிரிய கலாசாலையிலும், கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலையிலும், திருநெல்வேலிப் பண்டித ஆசிரிய கலாசாலையிலும், தலைமைத் தமிழ் விரிவுரையாளராக இருந்து தமிழுக்கும் சைவத்திற்கும் அளப்பரிய சேவை செய்தார். இதன்பின்னர் 1948-ம் ஆண்டு முதல் 1963-ம் ஆண்டு வரையும் உடுவில் மகளிர் கல்லூரியில் தலைமைத் தமிழ் விரிவுரையாளராக இருந்து 1963-ம் ஆண்டில் ஆசிரிய சேவையிலிருந்து ஒய்வு பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவர்மணி தனது 60ஆம் வயதில் இராமநாத ஆசிரிய பயிற்சிக் கழகத்தில் விரிவுரையாளராக இருந்த பண்டிதை பரமேசுவரி அம்மையாரைத் திருமணஞ் செய்து மக்கள் மூவரைப் பயந்தார். பழைய இலக்கண மரபைப் புதுப்பித்துத் தமிழ்மொழித் தூய்மையை சிதறவிடாது பாதுகாத்தும், இலக்கண பாடத்திட்டத்தை அரசின் உதவியுடன் அமைத்தும், புதுப்பாட நூல்களில் வடநூல் யாக்கத்தை நிலைநாட்டிப் பதிப்பித்தும், அறிஞர் பலரைத் தேர்ந்தெடுத்துத் தமிழ்ப் பாதுகாப்புக் கழகமொன்றை தன் தலைமையில் அமைத்தும். தனது கலைச்சொல்லாக்கப் பணியிலே புதிதாக தமிழ்ச் சொற்கள் பல ஆக்கியும், செந்தமிழ் நடைக்கு முதலிடங் கொடுத்தும் பிறமொழிச் சேர்க்கையை எதிர்த்தும் அதன் பயனாக பலப்பல கண்டனங்கள் எழுதியும் மேடைகளிலே சிங்கேறு போலச் சொற்போர் தொடுத்தும் மொழித் தூய்மையைப் பாதுகாத்து வந்தார்.

ஏராளமான தமிழ் நூல்களை எழுதிய இவர், தனது உடல்நிலை தளர்ந்த நிலையிலும் தெய்வ நம்பிக்கையுடன் ஈழத்துச் சிதம்பர புராணமெனும் அரும் பெரும் நூலை எழுதிப் புலவர்மணி, கவிசிந்தாமணி என்ற பட்டங்களும் வழங்கப் பெற்றார். வண்டமிழை வளம்படுத்தி ஈழத்துப் புலவர் பரம்பரையை இலங்கச் செய்து பல்லாற்றானும் நல்லிசை நிறுத்தி, வாழ்வாங்கு வாழ்ந்து. இராட்சத வருடம் மார்கழி மாதம் முதலாந் திகதி செவ்வாய்க்கிழமை (17-12-75) இரவு ஒரு மணியளவில் சிவபதம் எய்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# நவாலியூர்ப்

# புலவர்மணி சோ. இளமுருகனார்

அவர்களின்

# "சிவபதம்"

இடம்: ஈழத்துச் சிதம்பரம்

பாத்திரங்கள்: நந்தியம் பெருமான்
சிவன் — சத்தி
இளமுருகன்

ஆத்மசோதி உருவான இளமுருகன், கையிலே "ஈழத்துச் சிதம்பர புராணம்" என்னும் நூலை ஏந்திய வண்ணம் ஈழத்துச் 'சிதம்பர' வாயிலிலே நிற்கிறார். நந்தியம் பெருமான் சிதம்பர சபையிலே வீற்றிருந்த சிவனிடம் இளமுருகனின் வரவு கூறுகிறார்.

## காட்சி I

நந்தியம் பெருமான்:

ஈழத்துச் சிதம்பர புராண மென்னும்
ஏடதனைக் கரமேந்தித் தமிழாம் அந்த
ஆழத்தின் கடல்மூழ்கி முத்தெ டுத்தே
அத்தனையும் கோர்த்துந்தன் அடிகள் சூட்ட
வேழத்தண் புலவனவன் வியன்நூ லாசான்
விரும்பியுன தாலயத்தின் வாயில் வந்தான்
ஈழத்தின் நவாலியெனும் இன்னூ ராளும்
இளமுருகன் எனப்பேரும் சொன்னான் அன்னான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவன் :

வந்தித் திடவந்த புலவன் தன்னை
வாயில்முன் காத்திடவா வைத்தாய் நந்தீ!
சந்தித் தெதிர்கொண்டே அழைத்தே வந்து
சந்தத் தமிழ்தனையே உண்பேன் யானே!
முந்தித் தமிழ்க்கவிஞன் முகிழ்த்த செம்மல்
முத்தமிழை மாந்தும்இள முருக னன்றோ!
இந்தக் கணமதிலே யானும் சென்றே
இளமுருகன் மனங்குளிர அழைப்பே னிங்கே.

வாயிலிலே வந்து நிற்கும் புலவன் இளமுருகனை அழைத்து வரச் சத்தியையும் வரும்படி சிவன் பணித்தல்:

சிவன் :

சுந்தராம் பிகையே வாராய்
செந்தமிழ்ப் புலவன் இந்தப்
பைந்தமிழ்ச் சிதம்ப ரத்தின்
பசுமைசேர் புராணந் தன்னைத்
தந்தவன் வந்தே வாயில்
தனிலவன் நிற்கின் றானும்
இந்தநற் கணம்யாம் சென்றே
இன்பமாய் அழைப்போம் வாராய்.

சத்தி :

செந்தமிழ் சுவைக்க நீவிர்
செய்தவை மறப்பே னோநான்?
பைந்தமிழ்ப் பாடல் கேட்கப்
பரவைக்கோ தூது சென்றீர்!
சுந்தரத் தமிழை மாந்தச்
சுமந்து நீர் அடியும்பட்டீர்
வந்தவோர் கவிஞன் காண
வாசலை நாடிச் சென்றீர்!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிவன் :**

கவிச்சுவை அள்ளி அள்ளிக்
காசினி சுவைக்க நல்கும்
கவிஞனை வாசல் வைத்தே
கதைப்பது நன்றோ பெண்ணே !
தவிக்குதென் தமிழின் உள்ளம்
தாமதம் செய்யா மல்நாம்
புவிக்குளே புராணந் தந்த
புனிதனை அழைப்போம் வாராய் !

**சத்தி :**

வருகிறேன் எந்தன் தேவா !
வாசலில் வந்தே நிற்கும்
பெருமகன் புலவன் தன்னைப்
போற்றியே கூட்டி வந்தே
திருவளர் பதியாம் ஈழச்
சிதம்பர புராணந் தன்னை
இருசெவி மாந்தி யாமும்
இனித்திடும் தமிழைக் கேட்போம்.

சிவன், சத்தி இருவரும் ஈழத்துச் சிதம்பர வாயிலிலே வந்து நிற்கும் இளமுருகனிடம் ஓடோடி வருகிறார்கள். இது கண்ட இளமுருகன் சிவனையும் சத்தியையும் வீழ்ந்து வணங்குகிறான் ;

**இளமுருகன் :**

சந்தனச் சாந்தின் சுந்தர போற்றி !
சிந்தனைக் கரிய சிவனே போற்றி !!

* முந்தை மாலொடு முண்டகன் கண்டிலா
அந்த ஞானன்சிற் றம்பலத் தாடுவான்
வந்து திண்ணை வளம்பதி மேவிய
சுந்த ரேசனின் தூவடி சூடுவாம்.

3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* மும்மை மாமல மூடிய மூவுயிர்
செம்மை யெய்திச் சிவனடி சேர்ந்திட
இம்மை யம்மை எழுமையுங் காத்தருள்
அம்மை சுந்தரி யாளடி சூடுவாம்.

சிவபதத்தில் வீழ்ந்து வணங்கிய புலவன் இளமுருகனைச் சிவனும், சத்தியும் ஆசீர்வதித்தல் :

**சிவன் :** }
**சத்தி :** }

எழுந்திரு இளமுருக! எம்ஆசி தந்தோம் யாம்
பழந்தமிழ்ச் சுவையமுதப் பாட்டெலாம் மெய் சிலிர்க்க
வழங்குவாய் வளஞ்சேரும் வண்டமிழ்ப் பதியா மெந்தன்
சிதம்பர புராணந்தன்னைச் செப்புவாய் அவையிலின்றே.

சிவனும் சத்தியும் இளமுருகனைச் சிதம்பர சபைக்கு அழைத்தல் :

**சிவன் :**

தேரோடிப் பாலிக்கும் திருநாள் இன்றே!
தேன்தமிழை மாந்திடவே யானும் நன்றே!!
நாவோடி னிக்கவுளம் நயங்கள். கொஞ்சும்
நற்கவிதை யருந்தநினை யழைத்தேன் கண்டாய்!
பாவோடி சைக்குதமிழ்ப் பரம்ப ரையான்
பாவலனும் சோமசுந்த ரத்தான் ஈன்ற
சீரோடி னைதனையாம் செந்தமிழ்த் தேன்
செப்பும்இள முருகாநீ வாராய் வாராய்.

இளமுருகன் கூத்தப்பிரானை வணங்குதல்:

**இளமுருகன் :**

* ஆர்த்தெ ழுந்துல கோடுயிர் ஆடிட
நீத்தந் தண்மதி நீள்சடை யாடிட
ஏத்துந் திண்ண புரத்துநின் ருடிடுங்
கூத்தன் சேவடி கும்பிடு வாமரோ.

காட்சி I — முற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி II

இடம் : சிதம்பர சபை

பாத்திரங்கள் : சிவன், சத்தி, இளமுருகன், விநாயகன், கலைமகள், பைரவன், சமயகுரவர்.

புலவர்கள் : வள்ளுவன், அவ்வை, கம்பன், இளங்கோ அடிகள், ஒட்டக்கூத்தர், நக்கீரன், புகழேந்தி, ஆறுமுகநாவலர், சோமசுந்தரப் புலவர், மறைமலையடிகள், விபுலானந்தர், ஞானப்பிரகாசர்.

விநாயக வணக்கம் கூறி, இளமுருகன் சிதம்பர புராணத்தை அரங்கேற்றுதல் :

### விநாயகர் வணக்கம்

இளமுருகன் :

* திண்ண மாபுரச் செல்வனின் காதையை
வண்ண வண்டமிழ் செய்து வணங்கிட
நண்ணு மின்னலைப் போக்கும் விநாயகன்
தண்ண நந் தாமரைத் தாடலை சூடுவாம்.

விநாயகன் :

அண்ணல் ஈழநல் அம்பல வாணனின்
எண்ண மேநிறை எழிலிள முருகநின்
பண்ணும் பனுவலும் பரிமள மெய்திடத்
திண்ண மாயருள் திகழ்ந்து சொரிவனே.

இளமுருகன் கலைமகளை வணங்குதல்.

### நாமகள் வணக்கம்

இளமுருகன் :

* வெள்ளைப் போதிலு மெய்ந்நெறிப் பாவலர்
உள்ளப் போதிலும் வீற்றிருந் தொண்பொருள்
விள்ளு முத்தமிழ் வித்தகி சித்திரங்
கொள்ளுஞ் சேவடி கொள்ளுமென் சென்னியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாமகள் ஆசி நல்கல்

**நாமகள் :**

தனித்தமிழ் இனிமை காணும்
 தண்டமிழ்ப் புலவோய் நாவில்
இனித்திட நடனஞ் செய்வேன்
 இசைக்குக புராணந் தன்னைப்
பனித்திடக் கண்ணீர் மல்கும்
 பதித்தல புராணம் இன்றே
கனித்திடும் அவையிற் பாடக்
 களித்துநான் அருளும் தந்தேன்.

## சோமசுந்தரப் புலவர் வணக்கம்

**இளமுருகன் :**

● பண்ணார் தமிழாம் பாற்கடலிற்
 பழுத்த புலமை மத்திட்டுப்
பாங்கிற் கடைந்து கலைவாணர்
 பாகே தேனே எனப்பரவ
விண்ணோர் நாண வமுதனுங்க
 வேண்டும் துறைகள் மடைதேக்க
விலையே யறியாப் பாவமுதம்
 விருந்தில் தந்த பெருந்தேவா!
எண்ணார் கல்விச் சுடர்விளக்கே
 இயற்கைத் தாயின் கவினெல்லாம்
எழுதா வண்ணம் பலவூற
 எழுதும் வண்ணப் புலவோனே!
கண்ணார் மணியி லெமையிருத்தி
 காதல் செய்து வளர்த்திட்ட
கண்ணே! எந்தாய்!! நின்மலர்த்தாள்
 கருத்தில் வைத்துக் கும்பிடுவாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவுமது

**இளமுருகன் :**

* ஏம மாகிய எந்தை இயற்றமிழ்ச்
சேம நன்னிதி தந்தெங்கள் சிந்தையிற்
காமர் சைவக் கதிர்விளக் கேற்றிய
சோம சுந்தரன் தாள்மலர் சூடுவாம்.

சோமசுந்தரப் புலவர் ஆசி

**சோமசுந்தரப் புலவர் :**

இன்பச் சிவனின் இனியபு ராணம்
அன்புடன் கூறும் ஆசியும் தந்தேன்
என்புத் திரனே எழிலிள முருக!
பண்புச் சைவம் பரப்பிட எழுக!!

சிவயோகர் வணக்கம்

**இளமுருகன் :**

* தண்டமிழைக் கற்றுனது தந்தையைப்போல் வாவென்று
கண்டவுடன் எனக்கருளிக் கடைக்கணித்தே எனையாண்ட
வண்டறையுஞ் சோலைவளர் வான்கொழும்புத் துறைப்
பெருமான்
எண்டிசையு மேத்துசிவ யோகனடி யேத்திடுவோம்.

**யோகசுவாமிகள் ஆசி :**

**சிவயோகர் :**

உளமுருக ஊனுருக
உயிருருக உயிர்க்குயிராம்
சிவனுருக உமையுருகச்
செந்தமிழின் தாயுருக
அளவறியா அமுதுருகி
ஆனந்தத் தேன்பிலிற்றும்
இளமுருக எடுத்தியம்பு
இத்தல புராணந்தன்னை.

**அவையடக்கம் கூறி, ஈழத்துச் சிதம்பர புராணத்தை அவையிலே அரங்கேற்றுகிறுன் இளமுருகன்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவையடக்கம் :

**இளமுருகன் :**

* ஈழத்துச் சிதம்பர புராண மென்றிதை
வாழிய சொல்லவென் வாக்குக் கூசுமால்
ஆதிசூழ் நெடும்புவி அறிஞ ரொப்பரோ
தாழ்வெலா மன்பிலென் சென்னி தாங்குமே.

அவையடக்கச் செய்யுளைக் கேட்ட நக்கீரன், இறும்பூ தெய்துதல் :

**நக்கீரன் :**

சுவையடக்கம் பொதிந்துள்ள
சொற்களினாற் பணிவுடனே
அவையடக்கம் கூறியவன்
அவைதனையே அடக்கிவிட்டான் !
இவையடக்கும் அவையடக்கம்
இவனன்றோ தமிழ்ப்புலவன் !!
குவையெனவே தமிழ்க்கவிதை
கொட்டுகிறான் இளமுருகன்.

சிவன் இது கேட்டு இளமுருகனைப் புகழ்தல் :

**சிவன் :**

நெற்றிக்கண் காட்டினாலும்
குற்றமே குற்றமென்று
வெற்றிமார் தட்டியென்தன்
வியன்தமிழ் குற்றம்சொன்ன
அத்திருப் புலவனான
அறிஞன்நக் கீரன்தானும்
இத்திருச் சபைதனிலே
இன்செவி மடுத்தான்காணீர் !!

**புகழேந்தி :**

தங்கக் கவிதந்த தனையனிவன் பாடலிலே
சங்கத் தமிழ்மரபு ததும்புவதேன் ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒட்டக்கூத்தர் :** — இங்கெல்லாம்

பொற்றாம ரைவாவி போற்றும் புலமையிலே
கற்றார் உறைகின்ற தால்.

**முறைமலையடிகள் :**

பிறையழக ஞரீன்ற விளமுருக ஞரீந்த
நிறையழகு சேரீந்தக் — கதிநூலே
இறையழகு கூறீழ வளநகரி லாகாய
முறையழகன் காபாலி — அருள்வானே.

**இளங்கோவடிகள் :**

"தூற்பயன் தன்னை நுவலுதி கவிஞ!"

**இளமுருகன் :**

* திண்ணமா புரத்தவர் தெய்வக் காதையை
எண்ணுவார் கற்பவர் காதி லேற்பவர்
மண்ணிலே செல்வமும் வாழ்வு மெய்திப்பின்
விண்ணிலே சிவபுர மேவி நிற்பரால்.

**வள்ளுவன் :**

அழகைக் குழைத்தே தமிழைப் பொதித்துக்
கழலைப் பிடித்த கவி.

இள முருகன் நூலின் காரைவளச் சருக்கத்தைப் பாடுகிறான். புலவர்கள் அனைவரும் மதுவுண்ட வண்டு போலத் தமிழ்ப் போதையிலே திளைத்து நிற்கின்றனர்.

நூல்

ஆரை வேய்ந்தரு ளப்பனு மம்மையும்
வார மாயுறை வான்பதி யாதலின்
சீருங் கல்வியுஞ் சீலமு மோங்கிடுங்
காரை நாட்டணி காதலிற் கூறுவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒட்டக்கூத்தர்:**

மூர்த்தி தலம் தீர்த்தம்
 முறையாக வாய்த்த பெரும்
கீர்த்தி நிறை காரை
 கிளர் புகழைக் கூறினையே!
நேர்த்தி யான வள
 நீடுமலர்ப் பொய்கைதனில்
ஆர்த்தெ ழுந்தகன்ற ஓதி
 அன்ன மிலாக் காரணமேன்?

இளமுருகன் திண்ணபுரத்தில் அன்னங்கள் வாழாமைக்குக் காரணம் கூறுகிறான்:

**இளமுருகன்:**

* செய்யவள் சீர்த் தாமரைகள் செழித்துவளர்
 பொய்கைகளிற் செங்கா லன்னம்
உய்யவழி யிருந்துமவை ஒன்றேழியா
 தேகியதற் கேது நோக்கின்
நெய்யணிபூங் குழல்முல்லை நகைச்செவ்வாய்
 கனகமுலை நெடிய கண்ணின்
தையலவர் மணிநடைக்குப் புறங்கொடுத்துத்
 தாழ்வெய்தித் தளர்ந்த தாமே.

**கம்பன்:**

அற்புதக் கற்பனை!
 அழகுறு தமிழில்
சொற்பத மாகச்
 சொரிந்தனை கவிஞ!
சிற்சபை தனிலே
 சொக்கரும் சொக்கிட
நற்பதம் அருளும்
 நன்னாள் இன்றே!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JAFFNA RUTNAM LIBRARY

**சிவன் :**

என்னே அழகு என்னே உவமை!!
அன்னம் பயிலும் அழகார் நடைகள்
மின்னும் கவியின் மிளிர்நடைக் கிணையோ
தன்னேர் நடையின் தலையிள முருகன்.

முல்லை, மருத நிலத்தைப் புகழ்ந்த இளமுருகன் ஈழத்துச் சிதம்பர தலத் தமிழ்ப்பெரும் மக்களின் நயக்கும் தன்மையைப் புகழ்தல்.

**இளமுருகன் :**

* கவிச்சுவை யமுத மென்பார்
கரும்படு கட்டி யென்பார்
புவிச்சுமை தாங்கு மின்பம்
புரையுமோ கவிதைக் கென்பார்
அவிச்சுவை தீண்டோ மென்பார்
அமரராய்ப் பிறந்தோ மென்பார்
செவிச்சுவை இங்குக் கேட்கத்
தேவரும் பெயர்வ ரென்பார்.

**அவ்வை :**

வில்லெழுதிக் கயலெழுதி விளங்கும் வேங்கைச்
சொல்வழுதி அங்கிருந்தால் சூட்டுவரே முடியுனக்கு
வில்லெடுத்துச் சொல்லடுக்கி விடுகின்ற பாணமதில்
வல்லவனே நின்தமிழை வாயாரப் போற்றுவனே.

காரைநகர் நெய்தல் நிலத்தைப் புகழப்போந்த இளமுருகன், அந்திமாலையின் சிறப்பினை வர்ணித்தல் :

**இளமுருகன் :**

* மாலையிலே மணத்தென்றல் சுகங்கொள்ள
மாந்தரீர் வம்மி னென்று
நீலமணி நீர்மடந்தை கரைதோறும்
திரைக்கையால் நீடழைக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலமர்ந்த பெருமானுர் திருமுடியின்
அழகெல்லாம் அந்தி காட்டும்
வாலியவெண் சங்குயிர்த்த மணிமுத்த
நிலவோடு மாறு கொள்ளும்.

**விபுலானந்தர் :**

சிவனடி சேர்க்கும் நூலாம்
செந்தமிழ்ச் சிதம்பரத்தின்
நவநிதிப் பாடல் தந்தே
நமனையும் வென்றிட்டாயே !
தவமெனத் தமிழைப் பாடித்
தண்ணரும் தேவர் தாமும்
தமிழனுய் வாழ வென்றே
தனிநடை காட்டி னுயே.

**கவிகூற்று :**

சால்புறு காரைவளச் சருக்கமும் திண்ணபுரப்
பால்தவம் புரிசருக்கம் பதியுறை கோயில்காதை
மால்புகழ் சோமாற்கந்த மாண்புறு சருக்கம்கூறி
நூல்அணி மறையோர் காதை நுவல்கிருன்.

— இளமுருகன்.

இளமுருகன் சிதம்பர புராணம் பாடி, வாழ்த்துப் பாடுதல் :

**இளமுருகன் :**

* வெண்ணிலாத் தவழு மாட
வியன்புரங் கோயில் கொண்ட
கண்ணுதற் பெருமான் மற்றைக்
கடவுளர் மலர்த்தா ளேத்தித்
தண்ணிழல் அடைந்தோர் வாழி
தகைவிழாக் காண்போர் வாழி
மண்ணிலிப் பதியின் காதை
வழிவழி தழைத்து வாழி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுகநாவலர் :
ஞானப்பிரகாசர் :

கண்ணுத லானின் பாதம்
கவிமலர் மாரி பெய்து
மண்ணுல கினிலே ஈழ
மணிநகர் நவாலி தன்னில்
தண்ணிள முருக ஞன
தமிழ்க்கவி வாழி வாழி
நண்ணிடும் சைவம் வாழி
நந்தமிழ் வாழி வாழி.

ஈழத்துச் சிதம்பர புராணந்தன்னை இளமுருகன் சிதம்பரசபையிலே அரங்கேற்றம் செய்து கொண்டிருக்கிருர். அமரரான கவிஞர்களும் தேவர்களும் நயந்து பாராட்டுகின்றனர். சிவனும் சத்தியும் செந்தமிழ் நயத்திலே சொக்கிவிடுகின்றனர்.

காட்சி II — முடிவு.

## காட்சி III

இடம் : ஈழத்துச் சிதம்பர வாயில்

பாத்திரங்கள் : நந்தியம் பெருமான்
துவார பாலகர் இருவர்
நாரதர்

திரிலோக சஞ்சாரியான நாரதர் ஈழத்துச் சிதம்பர வாயிலிலே வருகிருர் இது கண்டு நந்தியம் பெருமானும், துவாரபாலகரும் சிற்சபையில் தனது நூலே அரங்கேற்றம் செய்யும் இளமுருகனின் சரிதையைக் கூறுமாறு வேண்டுகின்றனர். நாரதரும் மகிழ்ந்து, இளமுருகனின் சரிதையைக் கூறுகிருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நந்தியம் பெருமான் :**

திரிலோக சஞ்சாரி தீர்க்க தரிசியென
புரமேழும் போற்றிசெயும் புனிதரே நாரதரே
அரனே எனப்போற்றி அழகுஇள முருககவி
அரங்கேற்றம் செய்கிருன் அவையோர்கள் சொக்கிடவே

**நாரதர் :**

சொற்பதந் தனை அடுக்கிச்
    சொரிவானே அக்கவிஞன் !
அற்புதமாம் நூல்கள்பல
    அழகொழுகப் படைத்தனனே !!
நற்புகழை நானிலத்தில்
    நாட்டிவிட்டான் இள முருகன்
கற்பனையின் களஞ்சியமாம்
    கவிஞனிவன் வாழியரோ.

**துவாரபாலகர் :**

நாரதப் பெருமுனியே ! நவிலுவாய் இளமுருகன்
சாரமாய் அவன்சரிதை ஆவலாய்ச் செவிமடுப்போம்
ஆரமாய்த் தமிழ்க்கவிதை அணிவித்தே அரன்பாதம்
சேரவே வந்தனை நந்த செம்மலவன் சரிதைசொல்வீர்.

இளமுருகன் சரிதையை நாரதர், நந்தியம் பெருமானுக்கும் துவாரபாலகர்களுக்கும் கூறுதல்.

**நாரதர் :**

நந்தியம் பெரும ! துவார
    நாயகர் களேநீர் கேண்மின் !
செந்தமிழ்க் கவிஞன் காதை
    செப்புவேன் மகிழ்ந்தே யானும்
சுந்தரப் பூலோ கத்தில்
    சொரிந்திடு மீழ நாட்டில்
பைந்தமிழ்ப் பதி நவாலி
    பண்புவே ளாண் குலத்தில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றவர் ஏத்துகின்ற கவித்துவம் பரவி ஆங்கே
சுற்றவர் சூழச்சோம சுந்தரன் என்னும் நாமன்
சொற்றமிழ்ப் பாவில் ஆரம் சொக்கனின் பாதம்சூட்டி
நற்றவம் செய்தான் ஈசன் நயந்துமோர் மதலைதந்தான்.

அழகொடு ஞானம்கொண்ட அம்மகற்கேற்ப நாமம்
இளமுருகனெனச்சூட்டி இனித்திடப் புலவன்பாலும்
தமிழொடு கலந்துஊட்டும் தத்துவம் தந்துபாடல்
அமிழ்தமாய் நயங்களுண்ண அவனியில் வளர்ந்து
வந்தான்.

செந்தமிழ்ப் பாலையுண்ட சேந்தனும் இளமுருகன்,
வந்தனைப் பாடல்பாடி வளர்ந்தனன் காளையானன்
பைந்தமிழ்ப் பண்புமங்கை பரமே சுவரியென்னும்
சுந்தரியாளைக் கண்டு சொக்கினன் அவளை ஆண்டான்.

சொக்கனின் அருளால்சொக்கி சுகம்பெறும் பயனதாக
பக்குவப் பாலர்மூவர் பாரினுக்குவந்து தந்தான்
திக்கெலாம் புகழும் அந்தத் தீந்தமிழ் மாதைச் சேர்ந்தே
தக்கநூல் பலவும்யாத்து தரணிக்கே உவந்துதந்தான்.

செந்தமிழ்க் கன்னியோடு சேர்ந்தவர் பெற்றசெல்வம்
எந்தமிழ்ப் பண்பில்ஊறும் ஏடுகள் பலவாம் அந்தப்
பைந்தமிழ் நூல்கள்யாவும் பசுந்தமிழ்ப் பரம்பரைகள்
சிந்தையில் இனிக்கும் நல்ல சித்திரக் கவிதைப் பூக்கள்.

சைவமும் தமிழும்வாழச் சந்ததம் உழைத்தசெம்மல்
வையகமீதில் சைவ வளர்ச்சியை வீழ்த்துவோரை
கைவரப் பெற்றஆற்றல் கண்டனத் தண்டத்தாலே
நையவே புடைத்தேஆத்ம நடுநிலை நாட்டிவைப்பார்.

நந்தியம் பெருமான் :

நாரதமுனியே நீவிர் நயம்பெறு கவிஞன் காதை
சாரமாய்ப் பகரும்போதே சாற்றுவேன் ஐயம்கேளாய்!
கூரறிவாளன் அந்தக் குணவிள முருகன்யாத்து
ஆரமாய்த் தொடுத்த நூல்கள் அனைத்தையும் நவில்வாய்
தேவா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நாரதர் :*

சேந்தமிழ்ச் செல்வமெனும் நூலும் நல்ல
செழும்பூர ணன்கதையும் இலக்கணத்தின்
வந்தரு ருவவியும் செந்த மிழ்த்தேன்
வழக்கரங் கேற்றவை பவநூல் யாத்தான்
சிந்தையில் வருவேனில் விழாவும் கப்பல்
சிந்துதமிழ்ச் சொற்கலையும் கருக்கெழுத்து
தந்திடுசூத் திரங்கயநோய்ச் சிந்தும் பாடி
தமிழ்த்தாயின் தாளிணையில் சூட்டினனே.

முத்தமிழ்க் கடல்தனிலே மூழ்கி அன்னான்
முத்தெடுத்துக் கோர்த்துஅதை ஆர மாக்கி
எத்தனையோ கவிமாலை புனைந்து கட்டி
எழிலான தமிழன்னை பாதம் வைத்தான்
சித்தமெலாம் களிபொங்கச் செய்யுள் ஈழச்
சிதம்பரபு ராணமெனச் செய்தே அஃதை
அத்தனவன் அம்பலவன் பாதம் சூட்டி
அலங்கரித்து அரங்கேற்றம் செய்தான் காணீர்.

தூயசெந் தமிழில்யாண்டும் துலங்கிடு கவிகள்யாத்து
ஆயநற் றமிழில்மேவும் அழகுறு மரபும்காத்து
பாயிரம் பலவும்செய்து பண்புகள் தனையேஏத்தி
தோயுநல் லன்புசெய்யும் தொண்டனே இளமுருகன்

ஈழநன் நாடுதன்னில் இலக்கியப் புலவன் என்னின்
சோமசுந் தரனின்நாமம் துலங்கியே மனமுன் நிற்கும்
ஆழமும் அன்பும்கொண்ட அருந்தவப் புலவன் ஈன்ற
வேழமாய் வந்தான்இந்த வியனிள முருகன்கண்டீர்

புலியின்ற மதலையொரு பூனை யாமோ?
புலிபாயும் பத்தடிக்குப் புலியின்குட்டி
வலிவோடு பன்மடங்கு பாயு மன்றோ?
வண்டமிழின் காடுதனில் பாய்ந்தே அங்கே
கிலியோடு சிம்மமெலாம் நடுந டுங்கக்
கிளர்புலமை வீரமது காட்டி நின்ற
பொலிஞான தமிழ்ப்புலவன் புவியின் மீதில்
போற்றுமிள முருகனெனப் புகழும் பெற்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழியாத காவியங்கள் ஆக்கி வைத்தான்
ஆனந்த நாடகங்கள் தேக்கி வைத்தான்
பழிபாவ மஞ்சாத பாவி யர்க்குப்
பலமான கண்டனங்கள் பாடி வைத்தான்
எழிலான தமிழ்ச்சங்க நூல்க ளுக்கே
ஏற்றமிகு உரைகளுமே எழுதி வைத்தான்
தெளிவான கவிதையிலே தெய்வீ கத்தை
தீந்தமிழின் ஓவியமாய்த் தீட்டி வைத்தான்

சங்கநூற் புராணந் தன்னை சால்புற நுணுகி ஆய்ந்து
அங்கமாய் அமைத்து அந்த அமைப்பினில் பிறழா
வண்ணம்
தங்கமாக் கவிஞன் ஈன்ற தனையனும் இள முருகன்
சிங்கமாய்க் கவிஞர் போற்ற சிதம்பர புராணம் செய்தான்.

கற்பனையாம் சோலையிலே புகுந்தே ஆங்கே
கவின்நிறைந்த கவிதைமலர் கொய்து வந்து
அற்புதமாய் உலகினுக்கே அவனும் ஈய்ந்தே
அம்மலரின் செம்மணத்தை நுகர வைப்பான்
சொற்பழமாம் கவிமலரில் பழுத்த அந்தச்
சுவைப் பழத்தின் நயம்பகிர்ந்து கொடுப்பான் வள்ளல்
சிற்பரனும் சிவன்பதத்தை நாளும் போற்றிச்
சிந்தையிலே சூடிமகிழ் நாளைக் கண்டான்.

சொன்னயமும் பொருள்நயமும் சொரிந்து பாவில்
சொக்கிமன மகிழநகைச் சுவைகள் தேக்கி
தன்னிகரில் லாத்தமிழின் தூய்மை தன்னை
தனித்தமிழாய் இனித்திடவே ஆய்வும் சேர்த்து
மன்னிடுசெந் தமிழ்க்கவிதை மலர்கள் பூத்து
மணம்பரப்பும் சோலையென ஈழ நாட்டில்
இன்னமுதக் கவிமழையைப் பொழிந்து நின்ற
இளமுருகக் கொண்டலவன் வண்மை என்னே!

வெண்முத்துப் புன்னகையான் விரிந்து பரந்தமனம்
கண்முத்து நீர்பொழியக் கசிந்துருகும் கவியுள்ளம்
பண்முத்துப் பரதகலைப் பாடலுக்குக் கரைந்திடுவான்
விண்முத்து மாரியென வியன்கவிதை பொழிந்திடுவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திங்கள்தனைப் புனையரனைச் செவ்வாய் பாடத்
    திருச்சிற்றம் பலவனடி அன்பு தன்னை
பொங்கிஅலை மனப்புரவி யாளன் ஆள
    பொலிந்தமர்ந்த வெள்ளிமலை விட்டே வந்து
தங்கியருள் திண்ணபுரம் ஆச னித்தே
    தடங்கருணைப் பெருங்கடலின் அருளால் செய்த
அங்கமெல்லாம் புல்லரிக்கும் அழகார் நூலாம்
    அருங்கடலில் உதித்தகவி ஞாயிறு அன்றோ!

அருந்தமிழ் அலசித் திரை யெழுப்பி
    அமுதப் பாவைக் காசினியில்
அள்ளித் தரவா வின்றனனோ?
    ஆடிப் பிறப்புக் கவிமைந்தன்
இருந்தமிழ் நயமா வணி குலைய
    இடும்பை புரட்டு ஆதியவை
இயம்பும் பொய்யைப் பசிகொண்ட
    இன்னல் நோக்கார் தீகைப்படைய
மருந்தெனக் கண்டனத் தால்வென்றே
    மார்களி பொங்கிடக் கவிபாடி
மனத்தைக் கவர்ந்தான் இப்புலவன்
    மன்னும் ஈழ வளநாட்டில்
பெருந்தமிழ் செல்வ மாசியொடு
    பேணிடும் பங்கு நிறைந்தனனே
பெருந்தகை ஈழச் சிதம்பரத் தான்
    பெருஞ்சிவ பதத்தைப் பெற்றனனே.

**நந்தியம் பெருமான் :**

தவநிறை ஆற்றல் கொண்ட
    தமிழ்எனும் மந்திரத்தால்
புவனியில் நவாலி தந்த
    புலவனும் இள முருகன்
பவவினை யறுத்து முத்திப்
    பரமனின் பாத மான
சிவபதம் எய்தி னனே
    சீலமே! தமிழே!! வாழ்க!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவாலியூர்ப் புலவர்மணி

# சோ. இளமுருகனார்

எய்திய

# சிவபதம்

முற்றும்.

சுபம்

இயற்றியவர் " பிரமபுத்திரன் "

---

* இப்பாடல்கள் ஈழத்துச் சிதம்பர புராணத்திலிருந்து எடுக்கப்பெற்றன.

● இப்பாடல் சோமசுந்தரக் குருமணிமாலையிலிருந்து எடுக்கப்பெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருமைத் தந்தையாரின் நினைவாக

பா. சோ. பாரதி பாடியது
( பல் வைத்தியர் )

வளர்மதிசேர் நவாலிவதி வன்னியசே கரனார்
வழிவந்த புலவர்தனி மரபே இலங்க
இளமதிசேர் அழகனவன் இல்லறநல் வாழ்வில்
இறையருளால் இளமுருகன் எனும்நாமம் கொண்
டோன்
வளர்மதிபோல் உதித்தனனே வண்டமிழின் பயனாய்
வற்ருது பாவெழுதி வாகைபல சூடித்
தளர்வில்லா நெஞ்சுடனே தனித்தமிழ் வளர்த்தோன்
தந்தையாய் வந்திட நான் தவமேது செய்தேன்.

அன்புநீர் சொரிந்தெம்மைக் காத லோடு
அறிவூறிச் செறிந்திடவே வளர்த்திட் டானே
துன்பமிகத் தனைச்சூழும் வேளை தானும்
துயரமே காட்டிடா முகத்தி னானே
இன்பமாய்க் கவியென்றும் பொழிந்தே நல்ல
இன்தமிழைக் காத்திட்ட இளவல் தன்னை
என்புநீர் அற்றிடவே தமிழைக் காத்து
இறைசேர்ந்த எந்தையினைப் போற்று வேனே.

தங்கமணித் தாத்தாவின் தவமோங்கு தலைமணியே
சங்கமணித் தமிழ்கற்றுத் தனித்தமிழை வளர்த்தோனே
பொங்குமணிச் சுடர்முத்துப் போல்முத்து முத்தாக
செங்கைமணி விரலெல்லாம் தேய்ந்திடவே பாவெழுதி
எங்குமணி செய்திடுநல் இறவாத தமிழ்செய்தாய்
சங்குமணிக் குரலாலே தமிழ்முழக்கம் செய்திட்டாய்
துங்கமணிக் கரிமுகத்தான் தூயவருள் கிட்டியதோ
எங்கள்மணித் தந்தாய்நீ இனியமுத்தி யடைந்தனையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகுதவழ் நீறணிந்தே அலர்ந்த திருநுதலும்
பழகவரு வோர்மகிழப் பார்க்கும் அருள்விழியும்
உளமகிழ இதழ்சிந்தும் உவப்பிலா மலர்நகையும்
இளமைதரு கல்விஒளி இதம்வீசும் இன்முகமும்
வளமையிலே காண்போரை வணங்கவிழை இருகரமும்
குழையவரு முன்கோலம் கோமகனே இனியாமும்
வளவியசீர் நவாலியிலே வடிவொழுகக் காண்பதெப்போ
பழவினையும் நீக்கியிறை பாதமலர் கொண்டனையே.

தென்னு தமிழைக் கேட்போர்க்குத்
தெவிட்டத் தெவிட்ட ஊட்டிடுவாய்
உள்ள முருக இலக்கியங்கள்
உட்பொருள் விளக்கிச் சொல்லிடுவாய்
அள்ளிச் செந்தமிழ் அருஞ் சொற்கள்
ஆக்கி ஆக்கி நிறைத்திட்டாய்
அறிவுடை மாணவர் பேணிடவே
ஆசி கூறி ஆணையிட்டாய்
வெள்ளைக் கமலம் உறைதெய்வம்
விரும்பி உன்நாப் புகுந்தனளோ
விழைதேன் தோற்கச் சுவைமலியும்
வெற்றிக் கவிதை யாத்தனையே
கொள்ளை இன்பம் கொண்டனையே
குலப்பெயர் தன்னைக் காத்தனையே
குமரன் தாளை அடைந்தனையோ
குருவே நின்தாள் போற்றுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளும் வருத்தும் சலரோகம்
நலியச் செய்த போதினிலும்
நன்மை செய்தாய் நற்றொண்டு
நவிவோர்க் கெல்லாம் பேரொளியாய்
வாழும் வாழ்க்கை தந்தெய்மை
வளமாய் உயர வைத்திட்டாய்
வாட்டும் வறுமை வந்தாலும்
வற்ரு அன்பின் ஊற்ருனாய்
பாழும் மிடியே வந்துன்னைப்
பலவாய் இன்னல் செய்தாலும்
பற்றே வைத்துத் தமிழன்னை
பாகா யுருகக் கவிசெய்தாய்
வேழ முகத்தன் தாள் வணங்கி
விருப்பொடு முத்தி பெற்றிட்டாய்
வேறென் செய்வேன் யானறியேன்
வேந்தே நின்தாள் வணங்குவனே !

செந்தமிழ்ச் செல்வம் இயற்றி நல்ல
திக்கிக்குஞ் செந்தமிழ் வழக்கு நந்தந்தே
சிறப்புறு பூரண ஞர்கதையைத்
திறம்படக் கவிதையாய் ஆக்கிநின்ருய்
பைந்தமிழ் வளரவே சுருக்கெழுந்துப்
பாகமாய்த் தந்திட்டாய் சூத்திரமாய்ச்
சிந்துமிலக்கணச் சூரு வழியொடு
திறமான கப்பற் சிந்துஞ் செய்தாய்
இன்தமிழ் கொண்டு நல் வேனில்விழா
ஈடிலாக் காசநோய்ச் சிந்துகளும்
தந்திட்டே தனித்தமிழ் சிதைப்பவர்க்குத்
தரமான கண்டனம் ஏவிநின்ருய்
என்தமிழ் என்தமிழ் தனித்தமிழென்று
இமைகளும் மூடாது காத்துநின்ருய்
எந்தாய் உன்திறம் பாரறியும்
இறைஞ்சியே வணங்குவேன் உன்பதமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதந்தரு கற்பனை யிலங்கிடு வித்தமை
இயம்பிட வியலா இலக்கியமாஞ் சைவ
மதந்தரு நெறிகளும் மணங்கமழ் விதிகளும்
மலர்ந்திடு இன்தமிழ் வடிதேனும்ஈழ
சிதம்பர புராணம் அரங்கதில் ஏற்றிநற்
சிவன்கழல் சேர்ந்திட விழைந்தனை நீ
நிதம்மிக மிடியோ டவன்துணை யெனவே
நிறைந்திடு முத்தி அடைந்தனையே.

— சுபம் —

ஸ்ரீ சண்முகநாத அச்சகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

EVELYN RUTNAM LIBRARY ✻ JAFFNA ✻
321

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# புலவர்மணி சோ. இளமுருகனர் தோன்றிய வன்னியசேகர முதலி மரபு

வன்னியசேகர முதலி
|
பெரிய அருமையினர் (வன்னியசேகர முதலியின் மூன்ருந் தலைமுறையிலுள்ளவர்)
|
கதிர்காமர்
|
கந்தப்பர்
|
வேலாயுதர்
|
அருமையினர்
|
கதிர்காமர் (இலக்குமிப்பிள்ளை)

- சோமசுந்தரப்புலவர் (சின்னம்மை) (தாய்மாமன் மகள்)
  - இளமுருகனர் (பரமேசுவரி)
    - பாரதி (திருவரங்கநாயகி = சிறீரங்கேசுவரி)
      - யசோதரபாரதி
      - திருவரங்கன்
    - சிவஞானசுந்தரம் (மாணிக்கவல்லி = இரத்தினேசுவரி)
      - சிவஞானவல்லி
      - குமரகுருபரன்
    - காஞ்சனமாலை (வரதராசப்பெருமாள்)
      - கனகசபாபதி
      - சரபேசுவரன்
  - நடராசா (பரமேசுவரி)
  - வேலாயுதபிள்ளை (சாரதாதேவி)
  - மங்கையர்க்கரசி (வைத்தியலிங்கம்)
  - சரசுவதி (சின்னையா)
- ஆறுமுகம் (இராசம்மா)
- வேலுப்பிள்ளை (இராசம்மா)
- சரவணமுத்து (சுந்தராம்பிகை)
- மனேன்மணி (பொன்னுத்துரை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ சண்முகநாத அச்சகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org